

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதியில், மக்களின் கோரிக்கைகளை விரைவாக நிறைவேற்றும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் ஆவடி அடுத்த நடுக்குத்தகை ஊராட்சியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டத்தை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பொதுமக்கள் வழங்கப்பட்டு வரும் மனுவை உடனடியாக தீர்வு காண வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்தார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே. ஜெ.ரமேஷ், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன் ஊராட்சி மன்ற தலைவர் என்.லட்சுமி, ஒன்றிய கவுன்சிலர்கள் யமுனா ரமேஷ், சன் பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், மாவட்ட துணை இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.செந்தாமரை, ஒன்றிய கவுன்சிலர் கே.சுரேஷ், ஊராட்சி உறுப்பினர்கள் இ.என். சந்திரன், சாந்தகுமாரி, ரமேஷ், விஜயகுமார், கிளை செயலாளர்கள், அனைத்து துறை அரசு அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சேலம் இளைஞர் அணி 2வது மாநில மாநாடு:

# தாம்பரம் மாநகரக் கழகத்தினருக்கு இடவசதி-உணவு!

## நகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அறிவிப்பு!

தாம்பரம், ஜன.20- தாம்பரம் மாநகரக் கழகத்தினர்களின் கனிவான கவனத்திற்கு வருகின்ற ஜனவரி 21 ஞாயிற்றுக் கிழமை சேலம் மாநகரில் நடைபெறுகின்ற இளைஞர் அணி மாநில 2 வது மாநாட்டிற்கு சேலம் வருகை தரும் தாம்பரம் மாநகர கழகத்தின் சார்பில் தங்கும் இட வசதி உணவு ஏற்பாடுகள் குறித்து மாநகர கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

21-01-2024 ஞாயிற்றுக் கிழமை சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெற இருக்கின்ற இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு உரிமை மீட்பு மாநாட்டிற்கு கலந்து கொள்ள வருகை தரும் தாம்பரம் மாநகரத்துக்கு உட்பட்ட நிர்வாகிகள் கழகத் தோழர்கள் தங்குவதற்கும் உணவு அருந்துவதற்கும் கள்ளக்குறிச்சி ஆத்தூர் நெடுஞ்சாலை தலைவாசல் பகுதியில் அமைந்துள்ள எல். ஆர்.மகால் திருமண மண்டபத்தில் மாநகர திமுக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

மேற்சொன்ன திருமண மண்டபத்தில் 20-1-2024 மாலை முதல் 21-1-2024 இரவு வரையில் உணவு தங்கும் வசதி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கழகத் தோழர்கள் வருகை தருகின்றவர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் சனவரி 21 சேலத்தில் நடைபெறும் 2வது இளைஞர் அணி மாநில உரிமை மீட்பு மாநாடு விளக்க பொதுக்கூட்டம் சண்முகம் சாலை மேற்கு தாம்பரத்தில் மண்டல குழுத்தலைவர் தலைவர் – பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில இலக்கிய அணி இணை செயலாளர் கவிஞர் ஈரோடு இறைவன் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம். எல்.ஏ., சிறப்புரையாற்றினார்கள். இதில் மண்டல குழுத்தலைவர் தலைவர் எஸ்.இந்திரன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நகரமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி ஒட்டுமொத்த கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமையில் இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் - சைதை கிழக்கு

# கோட்டூர் ஆர். ராஜ்குமார் இல்ல மணவிழா வரவேற்பு! அமைச்சர் துரைமுருகன் வாழ்த்துகிறார்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

சென்னை, ஜன. 20- சைதை கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் ஆர். ராஜ்குமார் - ஆர்.காஞ்சனா ஆகியோரது மகள் ஆர்.ரம்யா, ஆவடி ரவிச்சந்திரன் - உமாதேவி ஆகியோரது புதல்வர் ஆர். மணிஷ்குமார் ஆகியோரது திருமணம் 21.1.1024 ஞாயிறு காலை 7.30 மணிக்கு -9.00 மணிக்குள்ளாக இராமாபுரம் ஜோதி மகாலில் நடைபெறுகிறது.

மணமக்களின் வரவேற்பு நிகழ்ச்சி இன்று (20.1.2024 சனிக்கிழமை இரவு 6.00 மணி முதல் நடைபெறுகிறது. வரவேற்பு நிகழ்ச்சிக்கு துணை மேயர் சைதை மு.மகேஷ் குமார் தலைமை தாங்குகிறார். பகுதிச் செயலாளர்கள் - மண்டலக் குழுத் தலைவர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இ.முருகேசன், மு. ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, கோ.சண்முகம், க.மணி, எஸ்.ஜே.சலாம், எஸ்.ரவி, கணேசன், இ என்.பாபு, மு.மகேஷ்லாரன்ஸ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக பொதுச் செயலாளர் - நீர்வளம் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சா.சி.சிவசங்கர் மற்றும் தமிழச்சிதங்க பாண்டியன், எம்.எல்.ஏ.க்கள் பு.தாயகம்கவி, எஸ். அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

மேலும் மாவட்ட பகுதி, வட்டக் கழக அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர் தோழர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

பா.சிவலிங்கம், மு.பலராமன், ப.தினகரன் ,கே. கோவிந்தராஜ்லு, பா.பூமிநாதன், எஸ்.பிரகாஷ் ஆகியார் நன்றி கூறுகின்றனர். கெ.வரதன், க.வேதகிரி, எம்.பால கிருஷ்ணன், என்.மாரி, ச.கோபு, த.ராம கிருஷ்ணன், வே.முருகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

2024-25-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன்னதாக

# வணிக சங்கப் பிரதிநிதிகள் - தொழில் நிறுவன கூட்டமைப்பினர்களுடன் ஆலோசனை!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன.20- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நேற்று (19.01.2024) தலைமைச் செயலகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் தலைமையில் 2024-2025ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன்னதாக வணிகச்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

புயல் மற்றும் அதிகனமழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள வணிகர்கள் தாக்கல் செய்ய வேண்டிய மாதாந்திர GSTR-3B மற்றும் ஆண்டறிக்கைக்கான கால அவகாசத்தை நீட்டித்து அறிவிக்கை வெளியிட்டதற்கு தமிழ்நாடு அரசிற்கு நன்றி தெரிவித்து, அப்பகுதி வணிகர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக குறைந்த வட்டியில் கடன் உதவித் தொகை வழங்குதல், தொழில்துறை வளர்ச்சிக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை 2024-2025-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தயாரிப்பில் கவனத்தில் கொள்ளுமாறு வணிகச்சங்க பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை த. உதயசந்திரன், அரசு செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, வணிகவரி ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பல்வேறு வணிக சங்கப் பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பினர் கலந்துகொண்டனர்.

சேலம் இளைஞர் அணி 2வது மாநில மாநாடு:

# 119வது வட்டக் கழகத்தினருக்கு வேண்டுகோள்!

## வட்டச் செயலாளர் க.வே.மோகன் அறிக்கை !

சென்னை, ஜன.20- சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119வது வட்டக் கழகச் செயலாளர் க. வே.மோகன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வரும் 21 ஆம் தேதி ஞாயிறு அன்று நடைபெற உள்ள நிலையில் வி. எம்.தெருவில் உள்ள வட்டக் கழக அலுவலகத்தில் சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் முன்னிலையில் புறப்பட்டு கொத்தாம்பட்டியில் உள்ள கீதாலயா மண்டபத்தில் தங்க உள்ளோம்.

இதில் 120 பேர் கலந்து கொள்ள உள்ளதால் அனைவரும் தவறாமல் குறித்த நேரத்திற்கு சனிக்கிழமை (20.01.2024) காலை 8.00 மணிக்குள் கழக அலுவலகம் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு வட்டக் கழகச் செயலாளர் க.வே.மோகன் தெரிவித்துள்ளார்.

புழல் எம். நாராயணன் தலைமையில்

# மாதவரம் தியாகி விஸ்வநாத தாஸ் நகரில் திருவள்ளுவர் தினம் - பொங்கல் விழா!

## கே.கருணாகரன் - சி.மூர்த்தி முன்னிலையில் - வி.கண்ணதாசன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 20- சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, தியாகி விஸ்வநாததாஸ் நகர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில், தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா, திருவள்ளுவர் தின விழா ஆகியவை கொண்டாடப்பட்டன.

சங்கத் தலைவர் சி. மூர்த்தி முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், சங்கத்தின் நிர்வாகிகள் அண்ணாமலை, குமார், கலைமணி, மகேந்திரன், சுரேஷ் ஆகியோர் வரவேற்றனர்.

திருவள்ளுவரின் அலங்கரிக்கப்பட்ட படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

மேலும் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டும் சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டும், சுமார் 250 குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள், கரும்பு, புடவை, காலண்டர் ஆகியவை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில், வழக்கறிஞரும் மனித உரிமைகள் ஆணையருமான வி. கண்ணதாசன் கலந்து கொண்டு வழங்கினார்.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் வட்டக் கழக நிர்வாகிகள் சி.பாலாஜி, எஸ். சிவக்குமார், கே. சண்முகபிரியன், ஜான்சன், பூபாலன், தியாகி விஸ்வநாத தாஸ்நகர்சங்கநிர்வாகிகள் நேரு, சுந்தர், குகன், பாலாஜி, சுரேஷ், மணிகண்டன், ராதாகிருஷ்ணன், சுதாகர் ,சங்கர், ஜெய்சங்கர், சிவக்குமார், விக்னேஸ்வரன், தீபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக ஊர் பொது மக்கள் சமத்துவ பொங்கல் இட்டு பொங்கல் திருநாளை உற்சாகமாக கொண்டாடினார்கள். மேலும் மகளிர் சுய உதவி குழுவினர் பல்சுவை நிகழ்ச்சிகள் நடத்தி பொது மக்களை மகிழ்வித்தனர்.

# நிலவில் தரையிறங்கிய 6வது நாடு என்ற பெருமையை பெற்றது ஜப்பான்!

ஜப்பான், ஜன.20- ஜப்பானின் ஸ்மார்ட் லேண்டர் ஃபார் இன்வெஸ்டிகேடிங் மூன் (SLIM) நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இவ்வாறு நிலவில் தரையிறங்கிய 6வது நாடு என்ற பெருமையை ஜப்பான் பெற்றிருக்கிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாத வாக்கில் இந்தியாவின் சந்திரயான் 3 நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இதைத் தொடர்ந்து நிலவில் தரையிறங்கிய முதல் நாடு என்ற பெருமையை ஜப்பான் பெற்றுள்ளது. ஜப்பானின் விண்வெளி ஆய்வு மையம் 100 மீட்டர் தொலைவில் இருந்து நிலவில் லேண்டரை தரையிறங்க முயற்சித்தது.

தற்போது லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்கிய நிலையில், இந்த விண்கலம் தனது செயல்பாடுகளில் வெற்றி பெற்றுள்ளதா என்பதை அறிந்து கொள்ள ஒரு மாத காலம் வரை ஆகலாம் என ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது.

சேலத்தில் கழக இளைஞர் அணி வது மாநில மாநாடு!

# சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணியினர் ஆர்.கே.நகர் தோழர்கள் தங்குமிடம்!

## மாவட்ட அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை ஜன 20- சென்னை வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு;

ஜனவரி 21 -இல் சேலம் மாநகரில் நடக்கும் இளைஞர் அணியின் 2 வது மாநில மாநாட்டின் சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணியினர்,ஆர்.கே.நகர் கழக தோழர்கள் தங்கும் இடத்தின் விவரம்

வசந்த மஹால் ஆத்தூர் அம்மாபாளையம் - ஆர். கே.நகர் பகுதி இளைஞர் அணி,ஆர்.கே.நகர் கழக தோழர்கள்

வித்யா மந்திர் - பேளூர் - இராயபுரம் பகுதி இளைஞர் அணி

வெங்கடேஸ்வரா மண்டபம் - பேளூர், ஏ.கே. மண்டபம் -பேளூர், ஜனா மண்டபம்- பேளூர் - பெரம்பூர் பகுதி இளைஞர் அணி.

வாகனங்கள் அந்தந்த பகுதிகளில் இருந்து மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முன்னிலையில் புறப்படும். வருகைதரும் அனைவருக்கும் தங்குமிடம் மற்றும் இரண்டு நாட்களுக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சேலம் - கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாடு:

# மாங்காடு நகர இளைஞர்கள் திரளாகப் பங்கேற்பு!

## நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா அறிவிப்பு!

காஞ்சிபுரம், ஜன.20 மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

சேலத்தில் நாளை (21.1.2024-ஞாயிறு) நடைபெறும் கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு, கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் எழுச்சியுடன் நடைபெறுகிறது.

இம்மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றுகிறார்.

இம்மாநாட்டில் நமது மாங்காடு நகரக் கழக இளைஞர் அணி தோழர்கள் திரளாக பங்கேற்றிடும் வகையில், இன்று (20.1.2024-சனிக்கிழமை) இரவு 8 மணியளவில் சைபர் சிட்டி அருகில் வாகனம் நிறுத்தப்படும் அருகில் உள்ள நடேச முதலியார் திருமண மண்டபத்தில் இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே சேலத்திற்கு வருகை தரும் இளைஞர் அணி தோழர்கள் சரியாக குறித்த நேரத்திற்கு வருகை தந்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சமத்துவப் பொங்கல் விழாவை முன்னிட்டு மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப் ஏற்பாட்டில் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி 197 வது வட்டம் பனையூர் உத்தண்டி பகுதியைச் சேர்ந்த 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் வழங்கினார்.உடன் வட்டச் செயலாளர் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் பஷீர்,தமுமுக அன்சாரி, வட்டக் கழக நிர்வாகிகள் அலி அக்பர்,இதயத்துல்லா, சரவணன், ஸ்ரீலேகா, அகிலன்,பவளவனன் மற்றும் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், பகுதி மீனவரணி தெய்வபாலன், மாவட்டத் தொழிலாளர் அணி ஆல்வின்,தாமோதரன்,தாஜுதீன், வி.சி.க சிவா, மற்றும் 197 வட்ட முன்னோடிகள்,வட்ட செயற்குழு உறுப்பினர்கள்,வட்டக் கழக பிரதிநிதிகள் மற்றும் கூட்டணி கட்சியினர் என பெருந்திரளாக கலந்து கொண்டார்கள்.

நடுக்கடலில் விழுந்து இறந்த காசிமேடு

# மீனவர் விமல் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன.20- கடலில் விழுந்து இறந்த காசிமேடு மீனவருக்கு திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும் மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே.பி.சங்கர் மீனவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி ரூ.50,000 நிதி உதவி வழங்கினார்.

தண்டையார்பேட்டை பல்லவன் நகரை சேர்ந்த 24 வயதுடைய விமல் என்பவர் கடந்த டிசம்பர் மாதம் 14 ஆம் தேதி இரண்டு இன்ஜின் பைபர் படகில் மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.

18.12.2023 அன்று நடுக்கடலில் இரவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பொழுது திடீரென கடலில் விழுந்து இறந்துள்ளார். இறந்த விமலின் குடும்பம் மிகவும் வறுமையில் வாடுவதாகவும் அவர்களுக்கு உதவிட வேண்டும் என்று சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட சிங்காரவேலர் இரண்டு இஞ்சின் பைபர் படகு மீனவர்கள் நலச்சங்கம் சார்பில் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் - மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி. சங்கர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.

இறந்த விமல் அவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறிய கழக மாநில மீனவரணி துணைத்தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், கழக மாநில மீனவரணி சார்பில் ரூபாய் 50,000 நிதிஉதவி வழங்கினார்.

இதில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட சிங்காரவேலர் இரண்டு இஞ்சின் பைபர் படகு மீனவர்கள் நலச் சங்க தலைவர் நந்தன், ஸ்ரீதர் மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தண்டையார்பேட்டை பல்லவன் நகரை சேர்ந்த 24 வயதுடைய விமல் என்பவர் கடந்த டிசம்பர் மாதம் 14 ஆம் தேதி இரண்டு இன்ஜின் பைபர் படகில் மீன்பிடிக்கச் சென்றுள்ளார். 18.12.2023 அன்று நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பொழுது திடீரென கடலில் விழுந்து இறந்துள்ளார். தகவல் அறிந்து அன்னாரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறிய கழக மாநில மீனவரணி துணைத்தலைவர் திருவொற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. கழக மாநில மீனவரணி சார்பில் ரூபாய் 50,000 நிதிஉதவி வழங்கினார். உடன் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட சிங்காரவேலர் இரண்டு இஞ்சின் பைபர் படகு மீனவர்கள் நலச்சங்க தலைவர் நந்தன், ஸ்ரீதர் மற்றும் சங்க நிர்வாகிகள் இருந்தனர்.